யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.
பருத்தித்துறை.

"உன்னையே நீ அறிவாய்"

# வருடாந்த பரிசில் தின விழா
# 2013

காலம் :- 29.06.2013
இடம்:- கல்லூரி மண்டபம்

தலைவர்
திருமதி.தேவராணி நவரட்ணம்.
(கல்லூரி அதிபர்)

பிரதம விருந்தினர்

கௌரவ சில்வேஸ்ரின் அலன்ரின் (உதயன்) அவர்கள்.
ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்.
யாழ்ப்பாணம்.

சிறப்பு விருந்தினர்கள்

திரு.ஐயாத்துரை இரங்கேஸ்வரன் அவர்கள்.
ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் வடமராட்சிப்பிரதேச அமைப்பாளர்.
வடமராட்சி.

மகுடவாசகம்

“உன்னையே நீ அறிவாய்”

## கல்லூரியின் தூர நோக்கு
## (Vision)

“வடமராட்சிப்பிரதேசத்தில் சைவப்பாரம்பரியத்தை பேணிப் பாதுகாத்து உயர்நிலைக் கல்லூரியாகத் திகழ்தல்”

## கல்லூரியின் பணிக்கூற்று
## (Mission)

“மாறி வரும் உலகின் சவால்களை எதிர்நோக்கக் கூடிய சிந்தனையாற்றலும் செயற்திறனும் ஆளுமையும் கொண்ட மாணவர்களை உருவாக்குவதற்கும் ஆசிரியர்களின் ஆளுமையை வளர்ப்பதற்கும் சமுதாயத்துடன் இணைந்து பௌதீக வளங்களைப் பயன்படுத்தி வினைத்திறன் மிக்க செயற்பாட்டை உருவாக்கல்”

# கல்லூரி அதிபர் அறிக்கை

எமது கல்லூரியின் 2012 ஆம் ஆண்டுக்குரிய பரிசளிப்பு விழா இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் இக்கல்லூரியின் பரிசளிப்பு விழா அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்

வடமராட்சிப் பிரதேசத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் எமது கல்லூரி சைவப்பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் கட்டிக்காத்து வருவதோடு, கல்வித்துறையிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சாதனைகள் பல படைத்து வருகிறது.

அதற்கு உறுதுணையாக இருந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் ஆசிரியர்கள் அனுசரணை வழங்கும் வலயக் கல்வி அதிகாரிகள், ஆதரித்துக் காக்கும் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள், நலன்விரும்பிகள், பொதுநிறுவனத்தினர் அனைவருக்கும் இப் பரிசளிப்புவிழா நன்நாளில் எனது நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாறிவரும் உலகின் சவால்களை எதிர் நோக்கக்கூடிய சிந்தனையாற்றலும் செயற்திறனும் ஆளுமையும் கொண்ட மாணவர்களை உருவாக்குவதற்கு ஏற்றவகையில் எமது கல்லூரியில் கல்வி முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. எமது கல்லூரி மாணவிகள் சாதனை புரிவதில் முன்நிற்பவர்கள். எமது கல்லூரியானது கல்விசார் போட்டிகள் பலவற்றினில் சாதனைகள் புரிந்து வருகின்றது. தமிழ்த்தினப்போட்டியில் தேசிய ரீதியாக பிரிவு நான்கு இலக்கணப்போட்டியில் பங்கு பற்றி எமது மாணவிகள் தொடந்து நான்கு வருடங்களாக வெற்றியீட்டி சாதனை நிலைநாட்டியுள்ளனர். அந்தவகையில் இவ்வருடமும் தேசியமட்ட போட்டிகளில் பங்குபற்றுகின்றனர் 2012ம் ஆண்டிலும் க.பொ.த (சா.த) பரீட்சையில் 5 மாணவிகள் 9A தரச்சித்தியைப்பெற்றுள்ளதுடன் 06மாணவிகள் 8A தரச்சித்தியும் பெற்று பாடசாலைக்கு பெருமைதேடித்தந்துள்ளனர். இதை விட சென்ற வருட விளையாட்டுநிகழ்வுகளில் உடற்பயிற்சிப்போட்டி மாகாணமட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்திலும் பங்குபற்றியுள்ளனர். மெய்வன்மைப்போட்டியிலும் எமது மாணவர்கள் தேசியரீதியில் பங்குபற்றியுள்ளனர்.

எமது பாடசாலையின் சென்றவருட க.பொ.த (சா.த) சித்திவீதம் முன்னைய வருடத்தைக்காட்டிலும் 13.3% த்தினால் சித்திவீத அதிகரிப்பைக்காட்டியுள்ளது. எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சியை இது எடுத்துக்காட்டுகின்றது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது கல்லூரி கற்று வல்ல சான்றோரையும், சமூகத்திற்கேற்ற நற்பிரஜைகளையும் உருவாக்கித் தந்துகொண்டிருக்கிறது. மாணவிகள் கல்வி ஒழுக்கத்தோடு, சிந்தனையாற்றல், செயற்திறன், ஆளுமை உடையவர்களாக எதிர்காலத்தில் திகழவேண்டும் என்ற உயர்நோக்கோடு, வினைத்திறன் மிக்க செயற்பாடுகள் எமது கல்லூரியில் முன்னெடுக்கப்படுகின்றன.

<u>எமது கல்லூரியில் இயங்கும் மன்றங்களும் அமைப்புக்களும்.</u>

1. இந்து மன்றம்

2. கிறிஸ்தவ மன்றம்
3. தமிழ் மன்றம்
4. கணிதவிஞ்ஞானமன்றம்
5. வரலாறு மன்றம்
6. ஆங்கில மன்றம்
7. அழகியல் மன்றம்
8. விளையாட்டு மன்றம்
9. உயர் தர மன்றம்
10. அனர்த்த முகாமைத்துவ மன்றம்
11. கணணிவளநிலையம்
12. நூலகம்
13. மனையியல் மன்றம்
14. பெண்சாரணியர்

## எமது கல்லூரியில் இயங்கும் மன்றங்கள், அமைப்புக்களும், செயற்பாடுகளும்

### இந்து மன்றம்:-

எமது இந்து மன்றம் மாணவர்களின் நற்பண்புகளை வளர்ப்பதோடு, சைவப் பாரம்பரியங்களைப் பேணும் இயல்புடையவர்களாய், ஒழுக்க சீலராய் வாழ வழிகாட்டுகிறது. தினமும் வகுப்பு ரீதியாக மாணவரால் நற்சிந்தனை வழங்கப்படுவதோடு வெள்ளிக் கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெறுகின்றன. சமய குருபூசைத் தினங்கள், தைப்பொங்கல், சிவராத்திரி, நவராத்திரி விழாக்களும் வருடந்தோறும் சிறப்பாகக் கொண்டடப்பட்டு வருகின்றன. இதன் பேறாக மாணவர் சமயப் பழக்கவழக்கங்களைத் தம் வாழ்வில் இணைத்துக் கொள்ள வழியேற்படுகிறது.

### தமிழ் மன்றம்:-

இம் மன்றச் செயற்பாடுகள் மூலம் மாணவரிடம் மறைந்துள்ள பல்வேறு திறன்களும் வெளிப்படுத்தப்படுகின்றன. அவர்களது ஆளுமை, ஆக்கத்திறன், சிந்தனாசக்தி, கற்பனாசக்தி போன்றன மெருகூட்டப்படுகின்றன. இம் மன்றச் செயற்பாடுகளின் போது மாணவர்கள் இனங்காணப்பட்டு போட்டிகளுக்குத் தயார்படுத்தப்படுகின்றனர். எமது மன்ற உறுப்பினர்கள் வலய, மாவட்ட, மாகாண, தேசிய போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றுள்ளமை மகிழ்வைத் தரக்கூடியது.

### கணித, விஞ்ஞான மன்றங்கள்:-

எமது மன்றச் செயற்பாடுகள் மூலம் மாணவரின் சிந்தனை, செயற்பாடுகள், நுண்ணறிவு யாவற்றையும் மேம்படுத்தும் வகையில் வினாவிடைப் போட்டிகள், செய்முறை விளக்கங்கள், பேச்சு, நாடகம் போன்ற நிகழ்வுகள் நடாத்தப்படுகின்றன. கோட்ட, வலய, மாகாணப்

பேச்சு, நாடகம் போன்ற நிகழ்வுகள் நடாத்தப்படுகின்றன. கோட்ட, வலய, மாகாணப் போட்டிகளில் மாணவர் பங்குபற்றி வெற்றியீட்ட இம் மன்றம் உறுதுணையாக இருந்து வருகிறது.

**வரலாறு, புவியியல் மன்றங்கள்:-**

இம் மன்றங்கள் வரலாற்று, புவியியல் அறிவை விருத்தி செய்து எமது நாடு, உலகம் போன்ற நோக்குகளை விரிவடையச் செய்கிறது. சமூகப் பொருத்தப்பாடுடைய, தேடலூக்கமுடைய மாணவர் சமுதாயத்தை உருவாக்க உதவுகிறது.

**அழகியல் மன்றம்:-**

அழகியல் மன்றச் செயற்பாடுகளால் மாணவரிடையே கலையார்வம் ஏற்படுத்தப்படுவதோடு அவர்களது அழகியல், ரசனை உணர்வுகள் மேம்படுத்தப்படுகின்றன. பல்வேறு நிகழ்வுகளிலும் மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளை வழங்கி பலரின் பாராட்டையும் பெற்று வருகின்றனர்.

**ஆங்கில மன்றம்:-**

இம் மன்றத்தின் வாயிலாக ஆங்கில மொழியின் அவசியம் மாணவரிடையே உணர்த்தப்பட்டு, ஆங்கிலத்தில் உரையாடும் வல்லமையும், ஆளுமையும் விருத்தி செய்யப்படுகிறது. போட்டிகளில் பங்குபற்றவும் எதிர்காலத்தில் மாணவர் உயர்பதவிகளைப் பெற்று வாழவும் வழிசெய்கிறது.

**விளையாட்டு மன்றம்:**

எமது விளையாட்டு மன்றம், காலைப் பிரார்த்தனையின் பின் நடைபெறும் உடற்பயிற்சியின் வாயிலாக உடல், உள, ஆரோக்கியம், ஆளுமை கொண்ட மாணவர் சமூகத்தை உருவாக்க உதவுகிறது. பெரு விளையாட்டுக்கள் ஒவ்வொன்றுக்கும் பொறுப்பாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதன் பேறாக விளையாட்டுத் துறையில் எமது கல்லூரி முன்னணி நிலையில் உள்ளது. இல்ல விளையாட்டுப் போட்டிகளினூர்டாக சிறந்த வீராங்கனைகளை உருவாக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

**வணிக மன்றம்:**

எமது கல்லூரியில் வர்த்தக பாடம் கற்கும் மாணவர் நலன் கருதிச் செயற்படுகிறது. தற்கால வர்த்தக உலகில் பல்வேறு விடயங்களை அறிந்து வாழ வழி காட்டுகிறது. மாணவரின் சேமிப்பு ஆற்றலை ஊக்குவிக்கிறது. போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்ட உதவுகிறது.

மாணவர்களின் கலைத்திறன்களை , ஆக்கச் செயற்பாடுகளை வளர்ப்பதோடு, நிகழ்வுகளின் போது .இம் மன்ற மாணவர்கள் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்..

## கிறிஸ்தவ மன்றம்:

கிறிஸ்தவ மாணவிகளின் பங்களிப்பையும் திறனையும் உயர்த்தும் வகையில் செயற்பட்டு வருகிறது. கிறிஸ்தவ மாணவர்கள் குறைந்த எண்ணிக்கையில் இருப்பினும் வருடந்தோறும் ஒளி விழா நிகழ்வினை சிறப்பாக நடாத்தி வருகிறது.

## உயர்தர மாணவர் மன்றம்:

உயர்தர மாணவர் மன்றமானது க.பொ.த உயர்தர கலை, வர்த்தக, விஞ்ஞான, வகுப்புக்களை உள்ளடக்கி அமைந்துள்ளது. அதிபர், ஆசிரியர்கள் வழிகாட்டலில் சீரும் சிறப்புமாக இயங்கி வருகிறது. வருடந்தோறும் இம் மன்றத்தால் ஒன்றுகூடல் நிகழ்வு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. இந் நாளில் மாணவர்களின் பல்வேறு ஆக்கங்களையும் தாங்கிய “இந்து விழி” சஞ்சிகை வெளியிடப்படுகிறது. மாணவரின் திறமைகள் வளர்த்தெடுக்கப்பட்டு, பொறுப்பினை உணர்ந்த மாணவர் சமுதாயம் உருவாக இம் மன்றம் வழி செய்கிறது.

## கணனி வள நிலையம

எமது கணனி வள நிலையம் சிறந்த முறையில் இயங்கி வருகிறது. மாணவருக்கு தனித்தனி கணனிகள் வழங்கப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதன் பேறாக பரீட்சைகளில் சிறந்த பெறுபேற்றை மாணவர் பெறுவது மகிழ்ச்சிக்குரியது.

## சாரணியம்

பாடசாலையின் எந்தவொரு நிகழ்விலும் எமது சாரணர்களின் பங்களிப்பு இன்றியமையததாகக் காணப்படுகிறது. சாரணியத்தில் இணைந்து பயிற்சி பெறுவதால் மாணவரது நற்பண்புகள், சேவைமனப்பான்மை வளர்க்கப்பட்டு பாடசாலைக்கும் சமூகத்திற்கும் சேவை செய்ய முடிகிறது. சாரணருக்கான சகல நிகழ்வுகளிலும் எம் மன்ற உறுப்பினர் ஆர்வத்துடன் பங்குபற்றிப் பயன் பெறுவது பாராட்டுதற்கு உரியது.

## நூலகம்

நூலகம், நூலகரால் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மாணவருக்குப் பயன்படுமாறு பல துறைசார்ந்த நூல்கள் இருப்பதுடன், மாணவர்களும், ஆசிரியர்களும் பயன்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. பல்வேறு நிறுவத்தினரும் நூல்களை வழங்கி மேலும் நூலகத்தை விரிவுபடுத்த உதவி வருகின்றனர். மாணவர்கள் தம் பிறந்த நாளில் ஒரு புத்தகத்தை பெரு விருப்போடு நூலகத்திற்கு வழங்கி வருகின்றனர்.

மேலும் நூலகத்தை விரிவுபடுத்த உதவி வருகின்றனர். மாணவர்கள் தம் பிறந்த நாளில் ஒரு புத்தகத்தை பெரு விருப்போடு நூலகத்திற்கு வழங்கி வருகின்றனர்.

## பழைய மாணவர் சங்கம்

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு பழைய மாணவர் சங்கம் பேருதவி புரிந்து வருகிறது. இக்கல்லூரியின் பழையமாணவர் சங்கம் கிளைச் சங்கங்களுடன் இணைந்து ஆற்றி வரும் சேவைகள் அளப்பரியன. கல்லூரித் தேவைகளை அவ்வவ்போது அறிந்து தக்க உதவிகளைச் செய்து வருகிறது. நூலக உதவியாளர், கணனி உதவியாளர், ஆங்கிலப்பாட ஆசிரியர், என 3 பேருக்கு மாதாந்தம் கொடுப்பனவு வழங்குகிறது. தமிழ்த்தினப்போட்டி, ஆங்கிலத்தினப்போட்டி, மெய்வன்மைப்போட்டிகளில் மாவட்ட, மாகாண, தேசியரீதியில் பங்குபற்றும் மாணவர்க்கு உரிய செலவுகளை தாமே பொறுப்பேற்று வருகின்றனர். வறுமைக்கோட்டுக்கு கீழ்ப்பட்ட மாணவருக்கு ஊக்குவிப்பாக உதவித் தொகை வழங்கப்படுகிறது. பாடசாலை வருடாந்தப் பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெற ஞாபகார்த்தப்பரிசில்கள் க.பொ. சாதாரண, உயாதரத்தில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசுகள் வழங்கி வருகின்றது. பாடசாலையின் பௌதீக வளத் தேவைகளையும் உடனுக்குடன் இனங்கண்டு பூர்த்தி செய்வதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. எமது பழைய மாணவர் சங்கத்தினரின் அனுசரணை ஆதரவு இவற்றால் எமது கல்லூரி முன்னேறி வருவது யாவரும் அறிந்த விடயம்.

## பாடசாலை அபிவிருத்திச்சங்கம்

பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பாடசாலை நிர்வாகத்துடன் ஒன்றிணைந்து செயற்படுகிறது. மாதம் ஒரு முறை செயற்குழுக்கூட்டமும் தவணைக்கொரு முறை பொதுக்கூட்டமும் கூட்டப்பட்டு பிரச்சினைகள் இனங்காணப்பட்டு தீர்வுகள் எடுக்கப்படுகின்றன. விளையாட்டுப்போட்டி, பரிசளிப்பு விழா, ஆசிரியர்தின விழா போன்றவற்றை எமது சங்க உறுப்பினர் முன்னின்று நடாத்தி ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

1. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரனையுடன் மாணவர், ஆசிரியர் மலசலகூடம் நவீன முறையில் அமைக்கப்பட்டது. பழைய மலசலகூடம் புனரமைப்புச் செய்யப்பட்டது.
2. விஞ்ஞானகூட மேல்மாடி பூரணப்படுத்தப்பட்டு மாணவருக்கு கையளிக்கப்பட்டது.
3. பெற்றோர் ஒத்துழைப்பினைப் பெற்று, சிரமதானத்தின் மூலம் பாடசாலைச் சுற்றாடல் சுத்தம் செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டது.
4. மாணவர் அடைவுமட்டத்தை உயர்த்துவதற்கான செயற்பாடாக ஆசிரியர் பெற்றோர் கலந்துரையாடல்கள் இடம்பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறான பல்வேறு வழிகளிலும் எமது கல்லூரி வளர்ச்சியில் அக்கறையும், ஆவமும் காட்டி வரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கு நன்றிகள் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

செயற்குழுக்கூட்டம் கூட்டப்பட்டு பாடசாலைத் தேவைகள் அறிந்து உடனடித் தீர்வு வழங்கப்படுகிறது. பாடசாலையை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்ல பலவழிகளிலும் ஆலோசனை கூறி உதவுகிறது.

## கல்லூரியின் ஆளணி விபரம் - 2013

### மாணவர் விபரம்

தரம் 6-11 இடைநிலைப்பிரிவு :-588

தரம்12-13 சிரேஷ்டபிரிவு :-384

மொத்தம் :-972

### ஆசிரிய ஆளணி விபரம்

| | |
|---|---|
| விஞ்ஞானப்பட்டதாரி | - 05 |
| கலைப்பட்டதாரி | - 24 |
| வணிகப்பட்டதாரி | - 04 |
| கல்வியியற் கல்லூரி | - 04 |
| பயிற்றப்பட்டவர் | - 16 |

### கல்விசாரா ஆளணி

| | |
|---|---|
| ஆய்வுகூட உதவியாளர் | - 01 |
| அலுவலக ஊழியர் | - 01 |
| தோட்டத்தொழிலாளி | - 01 |
| சுத்திகரிப்புத் தொழிலாளி | - 01 |
| காவலாளி (இரவு) | - 01 |

### பற்றாக்குறையான ஆசிரியர்

விஞ்ஞானம் ஆங்கிலமொழி மூலம் - 01

நடனம் (உயர்தரம்) - 01

### கல்விசாரா ஆளணியினர் தேவை

காவலாளி(பகல்) - 01

## 2012ல் இளைப்பாறிச்சென்றோர்.

திருமதி.சா.கிருஸ்ணன்
செல்வி.தே.கிருஸ்ணபிள்ளை
செல்வி.ஞா.திருநாதவுக்கரசு

திருமதி.சா.கிருஸ்ணன்
செல்வி.தே.கிருஸ்ணபிள்ளை
செல்வி.ஞா.திருநாதவுக்கரசு

## 2012ல் இடமாற்றம் பெற்றுச்சென்றோர்.

திருமதி.பு.ஜெயநந்தன்
திருமதி.மா.நவநீதராசா
திருமதி.சு.குலேந்திரன்
செல்வி.சி.குமாரசுவாமி
திருமதி.தா.தேவராசன்
திருமதி.ஜெ.சிவகுமார்
திருமதி.ந.ராஜகுமார்
திரு.S.ஞானமுரளி
திருமதி.ந.செந்திவேல்
திருமதி.ஜெ.செந்திலிங்கம்
திருமதி.கு.கனகலிங்கம்
திருமதி.அ.பரணீதரன்
செல்வி.வ.ஏரம்பமூர்த்தி
செல்வி.வா.தில்லைநாதன்
திருமதி.ம.சிவரஞ்சன்
திருமதி.வ.ஜெயராஜா
திருமதி.ஜெ.தயாநிதி
திருமதி.க.கல்யானி
செல்வி.சி.சிவகுரு
செல்வி.வி.இராசரத்தினம்

## 2012ல் பதவி உயர்வு பெற்றுச்சென்றோர்.(அதிபர்)

திருமதி.பு.தயாநிதி

## 2012ல் புதிதாக இணைந்த ஆசிரியர்கள்

1. திருமதி.ர.முகுந்தன்
2. திருமதி.J.ஞானச்சந்திரன்
3. திருமதி.வ.மணிமாறன்
4. திருமதி.அ.சுஜீவன்
5. திருமதி.மே.வீரபாகுதேவன்
6. திருமதி.வி.சிவநேசன்
7. திருமதி.ஸ்ரீ.கிருஸ்ணஜோதி
8. செல்வி.சி.சுப்பிரமணியம்
9. திருமதி.ய.சிவாகரன்
10. திருமதி.அ.மகேஸ்வரன்
11. திருமதி.சி.பரமேஸ்வரன்
12. திரு.கு.பிரதீபன்
13. திருமதி.P.தேவகுமார்
14. திருமதி.S.தயாபரன்
15. திருமதி.க.வரேந்திரன் - பகுதிநேர ஆங்கில ஆசிரியர்
16. திருமதி.அ.சுகுமாரன்
17. திரு.சு.சிவபாலன்
18. திருமதி.அ.கிருஷ்ணபாலன்
19. திருமதி.க.கனகசபாபதி
20. திருமதி.அ.தவராசா

## பழைய மாணவர் சங்க

ஆங்கில ஆசிரியர் - திருமதி.ர.சுபாசினி
நூலக உதவியாளர் - திருமதி.சி.லோகேஸ்
கணனி உதவியாளர் - திரு.சி.செந்தூரன்.

## 2012ல் கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள்

1. செல்வி. N. சுபேந்திரா
2. செல்வி. சி. சுசிந்திரா
3. செல்வி. K. சியாமளா

**எமது கல்லூரி வேண்டி நிற்கும் இன்றைய தேவைகள்**

4. நவீனத்துவம் வாய்ந்த மனையியல் ஆய்வு கூடம்
5. நவீனத்துவம் வாய்ந்த சிற்றுண்டிச்சாலை
6. ஆசிரியர்களுக்கான ஒய்வறை
7. பாடசாலைச் சுற்றுமதில்
8. மாணவர்களை போட்டிக்கு அழைத்துச் செல்வதற்கான வாகனம்.
9. விளையாட்டு மைதானம் விஸ்தரிப்பு ( இதற்கு மைதானத்தில் உள்ள பாழடைந்த நன்னீர்க் கிணற்றை துப்பரவு செய்து நிலமட்டத்துடன் சீமெந்திட்டு மூடி குடிப்பதற்கு குழாய் நீர் வசதி செய்து கொடுத்தல்)

## முடிவுரை

எமது கல்லூரித் தாயின் வளாச்சிக்கும் நிலைபேற்றுக்கும் பல வழிகளிலும் உழைத்த பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு, வலயக்கல்வி அலுவலகம், கல்விசார் கல்விசாரா நிறுவனங்கள், பெற்றோர், ஆசிரியர்கள், முகாமைத்துவக் குழுவினர், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்வதோடு மேலும் மேலும் எமது கல்லூரி பௌதீக வளத்தாலும் கல்வி வளத்தாலும் உயாச்சி பெற்று பண்புடைய சிறாரை உருவாக்கி உலகுக்கு வழங்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டி எனது அதிபர் உரையை நிறைவு செய்கிறேன்.

## க.பொ.த (சாதாரண தரம்) -2012

விண்ணப்பித்தோர் :- 116
தோற்றியோர் :- 114
க.பொ.த (உ.த) தகுதி பெற்றோர்:- 75

### <u>க.பா.த (சா.த) பெறுபேற்று அட்டவணை</u>

| | | |
|---|---|---|
| 1. | சந்திரமோகன் டிலோஜினி | 9A (ஆங்கில மொழிமூலம்) |
| 2. | முரளி வெண்ணிலா | 9A |
| 3. | கார்த்திகேசு கீர்த்தனா | 9A |
| 4. | ரவீந்திரன் சுரேகா | 9A |
| 5. | சிவகுமார் கோகிலா | 9A |
| 6. | கருணாகரன் ருபினி | 8A B (ஆங்கில மொழிமூலம்) |
| 7. | இராசமோகன் கபில்யா | 8A B |
| 8. | வீரசிங்கம் கஜிதா | 8A B |
| 9. | குமாரசாமி அர்ச்சனா | 8A B |
| 10. | துவச்செல்வம் நிதர்சினி | 8A C |
| 11. | குலநாயகம் ரஜிலதா | 8A C |
| 12. | துயாளகாந்தா கிருஷிகா | 7A 2B |
| 13. | பிரபாகரன் சர்மிளா | 7A B C |

10. துவச்செல்வம் நிதர்சினி 8A C
11. குலநாயகம் ரஜிலதா 8A C
12. ஜயாளகாந்தா கிருஷிகா 7A 2B
13. பிரபாகரன் சர்மிளா 7A B C
14. வேல்முருகு வாகினி 7A B C
15. அருளானந்தம் மோகனா 6A 2B C
16. தேவராஜா கோமகள் 6A 2B C
17. சிவஞானம் டிலக்ஸினி 6A B 2C
18. மகேந்திரராஜா இந்துஜா 6A 3C
19. சர்வேஸ்வரன் சர்மிஷா 6A 3C
20. ஸ்ரீகணேசன் நீரஜா 6A B S

## க.பொ.த (உயர்தரம்) – 2012
## சிறந்த பெறுபேறு பெற்றோர் விபரம்

### கணிதப்பிரிவு

1. மகேந்திரராஜா கௌசிகா 3B
2. தில்லைநாதன் சருபி 2B C
3. தியாகராஜா ரஜிதா 3C
4. சுவேந்திரன் சுகன்யா 2C S
5. கஜேந்திரலிங்கம் கஜேந்தினி C 2S
6. தேவகுமார் கௌசிகா C 2S
7. நாராயணசாமி சரண்யா 3S
8. தங்கராஜா கஸ்தூரி 3S
9. ரகுநாதன் துர்க்கா 3S
10. ராசநேரு தாட்சாயினி 3S

### விஞ்ஞானப்பிரிவு

1. செல்வராஜா தர்சிகா 3B
2. ஸ்ரீரங்கநாதன் தர்சிகா 2B C
3. ஜெகதீசன் கீர்த்தனா C 2S
4. கோபாலகுமாரன் தேனிக்கா C 2S
5. யோகரட்ணம் கார்த்திகா C 2S
6. செல்வகுமார் ஜோதிகா 3S

### வர்த்தகப்பிரிவு

1. தவராஜா சாத்விகா 2A B
2. சண்முகநாதன் லாவண்யா A 2B
3. சுபாஸ்காந்தா கிருசபா A B C
4. ரகுநாதன் லாவண்யா A 2C

8. ஆனந்தவடிவேல் மயூரி B 2C
9. கருணாமூர்த்தி மயூரி B 2S

**கலைப்பிரிவு**

1. கிரிதரன் நிவேதா A 2B
2. பத்மநாதன் சரண்யா A B C
3. அரியரட்ணம் ஆரணி 2B C
4. செந்தில்நேசன் கௌசிகா 2B C
5. குமாரகுலசிங்கம் நிசாந்தினி A 2C
6. கணேஸ் ஸ்ரீவர்ணா A 2C
7. ஸ்ரீகாந்தா மகாயினி B 2C
8. பிரான்சிஸ் பிரமிளா எலிசின் 2A C
9. ஜெயராஜா ஜனனி 2B C
10. சிறீ இந்திரானந்தன் நிசாந்தினி B 2S
11. சொர்ணலிங்கம் நளினி 2B C
12. நாகேந்திரன் துர்க்கா 2B C
13. தர்மராஜா தரண்யா B 2C

## பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் – 2012

### கணிதம்

1. அமலதாஸ் லிக்சனா - தகவல் தொழில்நுட்பம்
2. சிவசீலன் சுபாஜினி - பௌதிக விஞ்ஞானம்
3. வாசன் கம்சவாகினி - பௌதிக விஞ்ஞானம்

### விஞ்ஞானம்

1. கணேசலிங்கம் யாழினி - உணவு உற்பத்தி
2. பாலச்சந்திரன் ரோகினி - உயிரியல் விஞ்ஞானம்
3. சதாசிவம் தர்மிலா - சித்த மருத்துவம்

### முகாமைத்துவம்

1. செல்வவிநாயகம் கோகிலா
2. சண்முகநாதன் கிரிஜா
3. வைரமுத்து வைதேகி

### கலை

1. ஜெயராஜா சிவரூபி (7)
2. கணேசபாதம் நிதர்சனா (3)
3. சிவராசா நிரோசா (20)
4. தர்மரட்ணம் சாயினி (21)
5. தேவராஜா காயத்திரி (22)

3. சிவராசா நிரோஜா
4. தர்மரட்ணம் சாயினி
5. தேவராஜா காயத்திரி
6. நடராசமூர்த்தி அனுசியா
7. நாகநாதன் துவாரகா
8. நற்குணம் புஸ்பமீரா
9. நசீகரன் அல்வினா
10. சற்குணராஜா சுஜிதா
11. ஸ்ரீகாந்தா மகாயினி
12. சிறீசோதிநாதன் சத்தியா
13. சிவபாதம் புஸ்பமீரா
14. விக்கினேஸ்வரராஜா தனுஷியா
15. விநாயகம் நதினி
16. கோணேசபிள்ளை இனியவள்
17. சோமசுந்தரம் விஜிதா
18. பாலகிருஷ்ணன் ராதிகா
19. பரராஜசிங்கம் சுஜிவா
20. செல்வலிங்கம் சோபினி
21. சண்முகரட்ணம் சுகிர்தா
22. சிவலிங்கம் கலைச்செல்வி
23. சோமசுந்தரம் கோபிகா
24. மாசிலாமணி, பிரியங்கா

**நுண்கலை**

1. அருட்செல்வம் அருள்நிலா
2. சேல்வச்சந்திரன் கேஜினி
3. நூகராசா துஸ்யந்தினி
4. சுண்முகசுந்தரம் லோசிகா

# Co-Curricular Activities

## 1. தமிழ்த்தினப்போட்டி -2012

| இல | பிரிவு | | பெயர் | கோட்ட நிலை | வலய நிலை | மாவட்ட நிலை | மாகாண நிலை | தேசிய நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | வாசிப்பு | வாமதேவன் ஜெயமிதிலா | 1 | 1 | 1 | 2 | |
| 2 | 3 | பேச்சு | நடராசா துவாரகா | 1 | 3 | | | |
| 3 | 4 | பேச்சு | முரளி வெண்ணிலா | 3 | | | | |
| 4 | 4 | பாவோதல் | க.ணேசலிங்கம் ஜெனித்தா | 1 | 3 | | | |
| | 4 | இலக்கணப் போட்டி | கார்த்திகேசு கீர்த்தனா | 1 | 1 | 1 | 1 | பங்கு |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | இலக்கணப்போட்டி | புத்மநாதன் சரண்யா | 1 | 1 | 1 | 1 | பங்கு பற்றி யமை |
| 6 | தி.பே ா | தமிழறிவுப்போட்டி | ஜெயராஜா ஜெனனி | | | | | |
| | | | செந்தில்நேசன் கௌசிகா | | | | | |
| | | | அரியரத்தினம் ஆரணி | | 1 | 1 | 2 | |
| | | | குமாரகுலசிங்கம் நிஷாந்தினி | | | | | |
| | | | பத்மநாதன் சரண்யா | | | | | |
| | | | | | | | | |
| 9 | குழு 1 | இசைகுழு | | | 2 | | | |
| 10 | தி.பே ா | நாட்டுக்கூத்து – சிந்து | | | 3 | | | |

# 1. English Day Competition Winners - 2012
# Zonal, District Level

| S,No | Year | Event | Name | Zonal Level | **District Level** |
|---|---|---|---|---|---|
| 1 | Gr6 | Dictation | Manivannan Sangavi | 2nd | |
| 2 | Gr 7 | | Venugopal Jathiswariya | 1st | 3rd |
| 3 | | Recitation | Senthilrasa Hamsajini | 1st | |
| 4 | Gr 7 | | Vamathevan Jeyamithila | 2nd | |
| | | | Puvaneswaran Sumitha | 3rd | |
| 5 | Gr 8 | | Sundramoorthy Nithyapoopathy | 1st | |
| 6 | Gr 9 | | Vathanaruban Mathumai | 1st | 2nd |
| 7 | Gr 11 | | Murali Vennila | 1st | |
| 8 | Gr 11 | Creative Writing | Karunakaran Rubini | 3rd | |
| 9 | | News Reading | Kumaraswamy Sukeerthana | 2nd | |
| 10 | Gr 6 | Roleplay | | 1st | 3rd |
| 11 | Gr 7 | Roleplay | | 1st | |
| 12 | Gr 9 | Roleplay | | 2nd | |
| 13 | Gr 10 | Roleplay | | 2nd | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | Gr 7 | Roleplay | | 1st | |
| 12 | Gr 9 | Roleplay | | 2nd | |
| 13 | Gr 10 | Roleplay | | 2nd | |
| 14 | Gr 11 | Roleplay | | 1st | 2nd |

## 2. மெய்வல்லுனர் போட்டிகள் - 2012

## A. பெரு விளையாட்டுக்கள்

| தொ. இல | நிகழ்ச்சி | வயதுப்பிரிவு | வலய மட்டம் | மாவட்ட மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கபடி | 15 | 3ம் இடம் | | | |
| | | 19 | 2ம் இடம் | 3ம் இடம் | பங்குபற்றியமை | |
| 2 | உதைபந்து | 19 | 3ம் இடம் | | | |
| 3 | வலைப்பந்து | 15 | 2ம் இடம் | | | |
| | | 17 | 1ம் இடம் | | | |
| | | 19 | 2ம் இடம் | | | |
| 4 | துடுப்பாட்டம் | 19 | 3ம் இடம் | 3ம் இடம் | பங்குபற்றியமை | |
| 5 | உடற்பயிற்சி | 19 | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் | பங்குபற்றியமை |
| 6 | சதுரங்கம் | 15 | 3ம் இடம் | | | |
| | | 17 | 3ம் இடம் | | | |
| 7 | கரப்பந்து | 15 | பங்குபற்றியமை | | | |
| | | 17 | பங்குபற்றியமை | | | |
| 8 | எல்லே | 19 | பங்குபற்றியமை | | | |
| 9 | பூப்பந்து | 15 | பங்குபற்றியமை | | | |
| | | 19 | பங்குபற்றியமை | | | |
| 10 | மேசைப்பந்து | 15 | பங்குபற்றியமை | | | |
| | | 19 | பங்குபற்றியமை | | | |
| | | 19 | பங்குபற்றியமை | | | |
| 7 | கரம் | 15 | பங்குபற்றியமை | | | |
| | | 19 | 3ம் இடம் | | | |

# A. மெய்வல்லுனர் போட்டிகள் - 2012

| தொ இல | பெயர் | வயதுப்பிரிவு | நிகழ்ச்சி | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | B. யதுகிரி | 13 | நீளம் | 2ம் இடம் | 2ம் இடம் | | |
| 2 | P. தீவா | 15 | தட்டு | 2ம் இடம | 3ம் இடம | | |
| 3 | A. அகிலா | 17 | உயரம் | 2ம் இடம் | | | |
| 4 | S. மலர்வாணி | 17 | 100m<br>நீளம் | 2ம் இடம்<br>3ம் இடம் | 2ம் இடம் | 2ம் இடம் | பங்குபற்றியமை |
| 5 | T. அகிலா | 17 | 400m | 2ம் இடம | | | |
| 6 | S. சுகன்யா | 17 | 100m<br>முப்பாய்ச்சல் | 2ம் இடம்<br>3ம் இடம | | | |
| 7 | N. அஜந்தா | 17 | நீளம் | 2ம் இடம் | | | |
| 8 | S. சிந்துஜா | 19 | குண்டு<br>தட்டு<br>ஈட்டி | 3ம் இடம்<br>2ம் இடம்<br>1ம் இடம் | 3ம் இடம் | 3ம் இடம் | பங்குபற்றியமை |
| 9 | V. யோகமயிலினி | 19 | 100m<br>நீளம்<br>முப்பாய்ச்சல் | 3ம் இடம்<br>3ம் இடம்<br>3ம் இடம் | | | |
| 10 | | 15 | 4x100<br>4x400 | 3ம் இடம்<br>3ம் இடம் | | | |
| 11 | | 17 | 4x100<br>4x400 | 2ம் இடம்<br>3ம் இடம் | 3ம் இடம் | | |
| 12 | | 19 | 4x100<br>4x400 | 2ம் இடம்<br>3ம் இடம் | | | |
| 13 | | 21 | 4x100<br>4x400 | 3ம் இடம்<br>--- | | | |

## திருக்குறள் மனனப்போட்டி – 2012

<u>வலயமட்டம்</u>

மேற்பிரிவு :- வினோதா யோகநாதன் 1ஆம் இடம்
மத்தியபிரிவு:- சங்கவி சிவகுமார் 3ஆம் இடம்

## பொது அறிவுப்போட்டி -2013

**பாடசாலை மட்டம்**

விதுர்சினி ஸ்ரீராமச்சந்திரன் தரம்8
கீர்த்தனா குலேந்திரன் தரம்11
பிரியங்கா வாகீசன் தரம்12 வர்த்தகம்

## கணித அறிவுப்போட்டி -2012

பிரியங்கா வாகீசன் தரம்12 வர்த்தகம்

**கணித அறிவுப்போட்டி -2012**

**வலயமட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு மாகாணமட்டப் போட்டியில் பங்கு பற்றிய மாணவர்கள்**

**வலயமட்டம்**

1. தரம் 6 கிருஷ்ணராசா நஜிதா 1ம் இடம்
2. தரம் 7 வேணுகோபால வாணிதாசன் ஜதீஸ்வர்யா 3ம் இடம்
3. தரம் 8 அருள்ராசா இமெல்டா 3ம் இடம்

**விஞ்ஞான வினாடிவினாப் போட்டி - 2012**

**மாகாணமட்டப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள்**

**வலயமட்டம்**

1. தரம் 6 பாலச்சந்திரன் ஜிந்துகா 2ம் இடம்
2. தரம் 10 உமாசங்கர் சகானா 1ம் இடம்

# கல்லூரிக் கீதம்

பல்லவி

வட இந்து மங்கையர் கல்லூரி

வாழிய வாழி நீடுழி

அனுபல்லவி

ஆழியிறைவன் அருள் நிதம் பாடி

பாழ்வினை யகலப் பரிவுடன் பயிலும் (வட)

சரணம்

ஈழநன் நாடாம் எங்கள் பொன்னாட்டில்

திருவளர்ந் தோங்கிடும் பருத்தித்துறையாம்

தாழ்விலாத் தலத்தில் தவநெறிக் சங்கம்

தமிழ் மகள் மாண்புறத் தரணியி லருளிய (வட)

செந்தமிழ் முதலாம் சிறந்த நற்கலையும்

சிந்தையை யேற்றும் நந்திரு மறையும்

எந்தத்துறையிலும் தேர்ந்திடப் பயிற்சி

தந்திடும் தர்மம் தனதெனச் சாற்றும் (வட)

நங்குலம் தழைக்க நாடும் செழிக்க
பொங்கிடு மன்பும் மங்கிடா வீரமும்
எங்கணும் சேவைகள் செய்திட வளரும் (வட)

பன்னரும் பெருமைசேர் பரந்தநல் விண்ணே
பரிதியும் மதியு மின்றேல் இருட்புண்ணே
அன்பெனும் நிலவை பொழிபவள் பெண்ணே
இன்பக் கதிரொளி காட்டிடுங் கண்ணே
நன்மணி விளக்கே மாற்றுயிர் பொன்னே
மன்னுயிர் சேவையை தன்னுயிரென்னும் (வட)

T. Navaratnam
Mrs.T.NAVARATNAM
B.Ed.S.L.P.S-2
Principal
J/ Vadamaradchy Hindu Girls College
Point Pedro.